Press Release No: 864

Date: 15.10.08

# வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகள் இரத்த சோகை தடுப்பு திட்டம்

தமிழ்நாட்டில் நலவாழ்வு பிரச்சினையில் வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகள் இரத்த சோகை என்பது குறிப்பிடத்தகுந்த பிரச்சனையாக உள்ளது. கிராம மக்கள் பெரும்பாலும் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சமுதாய சூழல் மற்றும் பொருளாதார ரீதியாக கர்ப்பிணிகளிடம் ஏற்படும் இரத்த சோகை நோயை கட்டுப்படுத்துவதில் பல்வேறு வகையான முறைகள் கையாளப்பட வேண்டும்.

தாய்மார்கள் முக்கியமாக வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள கர்ப்பிணிகள் பிரசவிக்கும் போது இரத்தசோகையின் காரணமாக மருத்துவரீதியாக பிரச்சனைகளைச் சந்திக்க நேரிடுகிறது. இதனால் பிரசவத்தின் போது தாய்க்கும், குழந்தைக்கும் ஆபத்தை உருவாக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. சில நேரங்களில் பிரசவத்தின்போது தாயும், குழந்தையும் இறந்துவிடக் கூடிய நிலைமை இதனால் ஏற்படுகிறது.

2003–04 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மாவட்ட அளவிலான குடும்ப கணக்கெடுப்பில் தமிழ்நாட்டில் கர்ப்பகால இரத்த சோகை நோய் அதிகமாக உள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. மேற்கண்ட கணக்கெடுப்பின் வாயிலாக கர்ப்பிணிகளில் 94.1 சதவீதம் கர்ப்ப கால இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் 64.1 சதவீதம் மிதமான இரத்த சோகையாலும், 28.1 சதவீதம் சுமாரான இரத்த சோகையாலும் 1.9 சதவீதம் தீவிரமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை நிவர்த்தி செய்ய கர்ப்பிணிகள் மற்றும் வளரிளம் பெண்களின் எச்.பி ரத்த அளவை உயர்த்துவதாக தமிழக அரசு உறுதியளித்துள்ளது.

தீவிர கண்காணிப்பு மற்றும் சிறப்புத் திட்டமாக வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிகள் இரத்த சோகை தடுப்புத் திட்டத்தை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கு பரிட்சார்த்த ரீதியாக தானம் அறக்கட்டளை (DHAN FOUNDATION) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2 ஆண்டுகளில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிறுவனம்

திண்டுக்கல் மாவட்டத்தில் சாணார்பட்டி

மதுரை மாவட்டத்தில் கொட்டாம்பட்டி

இராமநாதபுர மாவட்டத்தில் முதுகுளத்தூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூர்

தேனி மாவட்டத்தில் போடிநாயக்கனூர்

ஆகிய ஒன்றியங்களைத் தத்தெடுத்துக்கொண்டு இத்திட்டத்தை செயல்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட முறைகளில் இத்திட்டம் செயலாக்கப்பட உள்ளது:

- இரத்த சோகையின் ஆதார கணக்கெடுப்புப் பணி
- கிராம நல வாழ்வு மற்றும் துப்புரவு குழுக்கள் மூலமாக மக்களிடையே சுகாதாரப் பழக்கவழக்கங்களில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவது.
- தகவல், கல்வி மற்றும் தொடர்பு
- செயல்பாடுகளின் மதிப்பீடு மற்றும் விரிவாக்கம்

மேலும் இதன் மூலம் வளரிளம் பெண்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களின் இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் தற்போதைய அளவை விட 20 சதவீதம் அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட பணிக்காக **தானம் அறக்கட்டளைக்கு** (DHAN FOUNDATION) ரூ.82.12 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9